## காலாண்டுத் தேர்வு 2019

## தமிழ் 2ஆம் தாள் - விடைக்குறிப்பு

### பகுதி 1

பலவுள் தெரிக. 14 × 1 = 14

1. எம்+ தமிழ்+ நா
2. அன்மொழித்தொகை
3. வினைமுற்றுத் தொடர்
4. திணை வழுவமைதி
5. எட்டு
6. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
7. தொடர்மொழி
8. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
9. ஆடு மேய்ந்தது
10. அறியா வினா, சுட்டு விடை
11. எழுது எழுது என்றான்
12. தோப்பு
13. பண்புத்தொகை
14. விளக்கு

### பகுதி 2 (மதிப்பெண்கள் 20 )

### பிரிவு 1

எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்க. 5× 2 = 10

15 கூத்துக் கலைஞர் பாட தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதி ஆயினர்.

16. ஆய்வக ஆய்வை மீண்டும் செய்து விடையைக் கண்டுபிடியுங்கள். நல்வாழ்த்துக்கள்

17. காட்சியை - காணுதல்

18 விதியை நினைத்து வீதியில் அமர்ந்தேன்.

(வேறுபொருத்தமானதையும் எழுதலாம்)

19. அ.பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

ஆ. தொழிற்கல்வியை ஒருவருக்கு உயர்வு தரும்.( வேறு பொருத்தமான தையும் எழுதலாம்)

20. உம்மைத்தொகை -.கீரி பாம்பு போல இருவர் சண்டை போடுகின்றனர்.( பொருத்தமான வேறு தொடர் எழுதலாம்)

21. சின்னம் , உரையாடல்

### பிரிவு- 2

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்க 28ஆவது விழாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க. 5× 2 = 10

22. 'வேங்கை' என்பது தொடர் மொழியாக 'வேம் + கை' அதாவது வேகின்ற கை. வேங்கை என்பது பொதுமொழியாக வேங்கை என்னும் மரத்தை குறிப்பது.

23. கெடுப்பதூஉம், துய்ப்பதூஉம்

24 அக்கா நேற்று வீட்டுக்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினாள்.

25 ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி தொடர்வது அடுக்குத்தொடர் ஆகும்.

சான்று- வருக வருக (பொருத்தமான பிற சான்றும் எழுதலாம்)

26. வெண்டைக்காய் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

மோர்குழம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

27 சுட்டு விடை, மறை விடை , நேர் விடை ஆகிய மூன்றும் நேரடி விடைகள் ஆகும்.

28 பொரித்த =பொறி +த் +த்+அ

புரி- பகுதி த் - சந்தி த் - இறந்தகால இடைநிலை அ - பெயரெச்ச விகுதி

பகுதி 3 (மதிப்பெண்கள் 50)

பிரிவு 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்க 2× 5 = 10

29 இயல்பாய் நிகழும் நிகழ்ச்சி மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

சான்று-

" போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட"

விளக்கம்

கோவலனும் கண்ணகியும் மதுரை நகருக்குள் செல்லும்போது,மதில் கொடிகள் அசைந்து, மதுரைக்குள் வராதீர்கள் என்பதுபோல அசைந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். எனவே இது தற்குறிப்பேற்ற அணி சான்று ஆயிற்று.

30. இடிப்பாரை- நிரை நேர் நேர்- புளிமாங்காய்

இல்லாத - நேர் நேர் நேர் - தேமாங்காய்

ஏமரா -நேர் நிரை -கூவிளம்

மன்னன் -நேர் நேர் - தேமா

கெடுப்பார்- நிரை நேர்- புளிமா

இலானும்- நிரை நேர்- புளிமா

கெடும்- நிரை - மலர்

31 வினா ஆறு வகைப்படும். அறிவினா அறியா வினா வினா கொளல் வினா கொடைவினா.

அறி வினா- நாம் அறிந்த ஒன்றே டேய் அறிந்து உள்ளனரா என்று வினவுவது

சான்று-மாணவரிடம் இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று ஆசிரியர் கேட்பது

அறியா வினா- தான் அறியாத ஒன்றை அறிந்துகொள்வதற்காக வினவுவது.

சான்று -ஆசிரியரிடம் இந்த கவிதையின் பொருள் யாது என்று மாணவன் கேட்பது

சேலம் மதுரா

ஐய வினா -ஐயம் நீங்கி தெளிவு பெறுவதற்காக கேட்கப்படுவது.

சான்று இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலை? என வினவுதல்

கொளல் வினா- தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது.

சான்று- ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா ?என்று நூலகரிடம் வினவுதல்

கொடை வினா -பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது.

சான்று -என்னிடம் பாரதிதாசன்கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன உன்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இருக்கிறதா? என்று கொடுப்பதற்காக வினவுதல்.

ஏவல் வினா -ஒரு செயலை செய்யுமாறு எழுதப்பட்டு வினவுவது

சான்று -வீட்டில் தக்காளி இல்லை நீ கடைக்கு செல்கிறாயா என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.

பிரிவு - 2

எவையேனும் 4க்கு மட்டும். (20)

32 அட்டவணை

1.ஓடி வந்தாள், 2.அம்மா நில், 3.அரசன் தந்தார் 4.தந்ததைக் கேட்டார் 5.பார்த்த துளிர்

33 1. நறுமணம் 2. புதுமை 3. காற்று 4 .விண்மீன் 5. காடு

34. புயல் வரப்போகிறது யாரும் வெளியில் செல்ல வேண்டாம். தொலைபேசி மின்சாதனங்கள் பயன்படுத்துவதை தவிர்க்க செய்வேன். வானொலி அறிவிப்பின்படி நடக்க செய்வேன் புயல் கரையை கடக்கும் வரை யாரையும் வெளியில் விடாமல் பார்த்துக் கொள்வேன்.

(பொருத்தமான பிறவும் எழுதலாம்)

35 மூக்கணாங்கயிறு கட்டி மாட்டை துன்புறுத்தி ,ஓட்டிய காலம் எல்லாம் மலையேறி விட்டது.

மாட்டைப் போல மூக்கணாங்கயிறு உனக்கு கட்டி அலைபேசி உன் மீது அமர்ந்து உன்னைத் துன்புறுத்தி செல்லும் .

அலைபேசிக்கு அடிமையான மானிடா உன் நிலைமையைப் பார்த்தாயா?

( பொருத்தமான பிறவும் எழுதலாம்)

36. பள்ளியில் நான் வகுப்பறைக்குள் அமைதியாக அமர்ந்திருப்பேன். கேடான எந்த ஒரு விஷயத்தையும் செய்ய மாட்டேன். பாடங்களை அன்றே படித்து விடுவேன்.

வீட்டில் நான்

வீட்டில் நான் பெற்றோருக்கு நல்ல மகனாக நடந்து கொள்வேன்.அப்பா அம்மா சொல்லும் வேலைகளை செய்வேன்.அப்பா அனுமதிக்கும் போதுதான் தொலைக்காட்சியை பார்ப்பேன். பள்ளியில் ஆசிரியர் கொடுத்த வீட்டுப் பாடங்களை வீட்டில்

த சேட்டு மதார்சா

செய்வேன். வீட்டில் செடி மரங்களை வளர்ப்பேன்.

37.1. காளமேகப்புலவர்

2.கத்துகடல்- அத்தமிக்கும்

3.அத்தமிக்கும்- அரி- அகப்பை -அன்னம்

4 .சோறு 5.ஊர் + அடங்கும்

பிரிவு 3

எவையேனும் இரண்டு மட்டும்.(10)

38 .தந்தை சாங் ,தாய், பாட்டி ,பல சகோதர சகோதரிகள் கொண்ட ஏழ்மையான குடும்பம். காலை 5 மணி முதல் மாலை வரை உழைக்கும் குடும்பம் கல்வி அறிவு இல்லாததால் இவர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது.தன் குடும்பத்தில் இவள் மட்டும் வித்தியாசமானவள். தாய் அணைக்கும் போது சரி பருத்தியின் முதல் பூவை பார்க்க வேண்டும் என்று எண்ணம் தோன்றும். தான் முதலில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் .ஒருநாள் தாயுடன் வில்சன் .வீட்டிற்கும் மேரி சென்றாள். அங்கு அங்கிருந்த புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தால் வில்சன் இளையமகள் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி உன்னால் படிக்க முடியாது என்று கூறினாள். அந்த வார்த்தை அவளுடைய மனதை கிழித்தது. கற்றவர்கள் தான் இந்த சமூகம் மதிக்கும் என்று எண்ணி தான் படிக்க வேண்டும் என்ற அந்த ஒற்றை வரி அவள் மனதை அசைபோட வைத்தது .மிஸ் வில்சன் மேரியின் பாசி மேலும் தூண்டி விடுகிறார். வேடிக்கை தந்தை சிலேட்டு பலப்பம் வாங்கித்தந்தார் தினம் மேரி புதிது புதிதாய் கற்க ஆரம்பித்தாள் புதிய கல்வியால் மேரி புதிய நபராக மாறினார் மேரி நன்கு படித்தால் மேலும் படிக்க ஆசைப்பட்டாள் ஆனால் அவரிடம் பணம் இல்லை யாரோ ஒரு வெள்ளைக்கார பெண்மணி ஒரு கருப்பின குழந்தையின் படிப்பிற்காக பணம் அனுப்பியிருக்கிறார் அதை பெறுவதற்கு ஆளாக நீ தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறாய் என்று கூறி அங்கு வந்தார்

ஊரை மீறி வாழ்த்தி வழி எழுப்பியது நன்கு படித்து பிற்காலத்தில் மேரி ஜெனி சாதனைப் பெண்மணியாக திகழ்ந்தாள்.

39 அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் உடன் விண்வெளிப் பயணம் மேற்கொண்டேன். வானத்தில் உள்ள ஒவ்வொரு நட்சத்திரங்களையும் வெளியே பார்த்தேன். ஒவ்வொரு கோளும் சுற்றிக்கொண்டு இருப்பதை நன்கு கவனித்தேன். பால்வெளியில் மிதந்தேன் சித்திரக் கூட்டங்கள் எனக்கு முத்தமிட்டனர். கோள்கள் எனக்கு மகிழ்வைத் தந்தனர். அவர் செய்து வைத்திருந்த கால இயந்திரத்தில் நாங்கள் இருவரும் ஏறி எதிர்காலத்தில் நிலாவில் மனிதன் எப்படி வாழ்வான் என்று சிந்தித்து

சு.சேட்டு மஹாராஜா,

நிலவினை அடைந்தோம். எங்கும் பசுமை மரங்கள் மலைகள் நறுமண பூந்தோட்டங்கள் பஞ்சுபோன்ற பச்சை புல் மெத்தைகள் இயற்கையான சூழலில் நானும் அவரும் வாழ்ந்து பிறகு இந்த கால எந்திரம் மூலம் மீண்டும் பூமி திரும்பினோம்.

(பொருத்தமான பிறகும் எழுதலாம்)

40. ஒருநாள் நாங்கள் அணை நாங்களும் எங்களுடைய நண்பர்களும் காவிரி ஆற்றின் கரையில் அமர்ந்து குளித்துக் கொண்டிருந்தோம். ஆற்றுநீரில் மிகவும் ஆனந்தமாக விளையாடி கொண்டிருந்தோம். திடீரென எங்கோ பெய்த மழையில் ஆற்று வெள்ளம் அதிகரிக்கத் தொடங்கியது. வெள்ளம் சுமாராகத்தான் வரும் என்று கற்பனையில் நாங்கள் நீருக்குள்ளேயே குளித்துக் கொண்டிருந்தோம். திடீரென ஒரு காட்டாற்று வெள்ளம் மின்னலைப் போல வந்து எங்களை தாக்கியது. அனைவரும் சிதைந்தும் என்று நினைத்தோம் அந்த காட்டாற்று வெள்ளம் எங்களை அடித்துச் சென்றது. நல்ல விதமாக ஒரு பாலம் ஒன்று குறுக்கே இருந்தது. நாங்கள் அனைவரும் தண்ணீரோடு வந்தபோது அந்தத் தூணை பற்றிக்கொண்டு உதவி கேட்டோம்.

41.ஈரோடு மாவட்ட

1.உ.பெயர் - முகிலன் 2.த.பெ.ராமன்

3.பி.தேதி - 02.03.2004 4.வயது - 15

5.10ம் வகுப்பு 6.88883681115

6.முகவரி10,காந்தி நகர்,ஈரோடு.

மைய நூலகம் ரூ.60

42.பொன்னிற சூரியன் அதிகாலையில் எழுகிறது. இருளைப் போக்க தன் பிரகாசமான கதிர்களை விரிக்கிறது. வெண்ணிற மேகங்கள் தங்களுடைய வான்வெளியில் உலாவருகிறது. வண்ணமிகு பறவைகள் தங்களுடைய தாளத்தில் ஒலிக்க ஆரம்பிக்கிறது. அழகான பட்டாம்பூச்சி பூக்களைச் சுற்றி ஆடுகிறது. தென்றலின் நிரப்புகிறது. தென்றல் மென்மையாக எல்லா இடங்களிலும் வீசி அனைத்தையும் இன்பம் பெறச் செய்கிறது.

அல்லது

1. மொழியின் பண்பாட்டு பண்பாட்டின் சாலை வரைபடம். அது மக்கள் எங்கிருந்து வருகிறார்கள். எங்கு செல்கிறார்கள் என்பதை சொல்கிறது.

2.ஒருவருக்கு புரியும் மொழியில் பேசினால் அது அவனது தலைக்கு செல்கிறது. அவனது சொந்த மொழியில் பேசினால் அது அவனது மனதிற்கு செல்கிறது.

பகுதி 4 (16)

43 அனுப்புதல்

தமிழ்ச்செல்வன்

12 பாரதி நகர்

ஈரோடு

பெறுநர்

உயர்திரு .ஆணையர் அவர்கள்

உணவு பாதுகாப்பு துறை அலுவலகம்

ஈரோடு

ஐயா,

பொருள் -உணவு விடுதி மீது புகார் அளித்தல்

வணக்கம். இன்று காலை நான் அறுசுவை உணவு விடுதியில் உணவு உண்டேன். வெண்பொங்கல் மற்றும் இட்லி ஆகியவற்றை வாங்கி உண்டேன் வெண்பொங்கல் இல் கல்லும் புழுவும் இருந்தது. விலைப்பட்டியல் ஒன்றும் வாங்கிய தொகை ஒன்றும் ஆக இருந்தது. இதுகுறித்து விடுதி மேலாளரை கேட்டபோது எல்லாம் அப்படித்தான் என்று பேசுகிறார் .உரிய புகைப்படங்களை இத்துடன் இணைத்துள்ளேன். தாங்கள் ஆய்வு செய்து உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

தமிழ்ச்செல்வன்

அல்லது

104 தாமரை நகர்

ஈரோடு 5

13 .9. 2019

அன்புள்ள நண்பா

உன் உயிர் நண்பன் எழுதும் கடிதம் நான் இங்கு நலம் அதுபோல் நீ அங்கு நலமா உன் குடும்பத்தில் உள்ள அனைவரும் நலமா இன்று காலை தினத்தந்தி நாளிதழில் உன்னுடைய புகைப்படத்தை பார்த்தேன் உனக்கு அமைச்சர் விருதினை கொடுத்ததை பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன் அப்போதுதான் தெரிந்தது நீ மாநில அளவில் நடைபெற்ற நீதியின் பாதுகாப்பு என்ற தலைப்பில் அமைந்த பேச்சுப் போட்டியில் மாநிலத்தில் முதல் பரிசு பெற்றார் என்பதை அறிந்தேன் உன்னுடைய வெற்றி என்னுடைய வெற்றி அல்லவா நானும் நம் நண்பர்களும் உன் வெற்றியை கொண்டாடினோம் மேலும் இம்மாதிரியான பல பரிசுகளை நீ வாங்க என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் அப்படி முடிக்கின்றேன் மற்றவை நேரில்

இப்படிக்கு

உன் உயிர் தோழன்

சிற்பி

உறைமேல் முகவரி

கவியரசன்

16 ,நேரு வீதி

மதுரை 5

44 விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்

முன்னுரை

விண்வெளியில் கால் பதித்த முதல் இந்திய பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பனாசாவ்லா அவரைப் பற்றிய கட்டுரையில் காண்போம்.

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள்

இன்றைய அறிவியல் உலகம் சுருங்கிவிட்டது. எந்த ஒரு மூலையில் நடக்க கூடிய எந்த ஒரு செய்தியையும் விரல்நுனியில் நாம் பார்க்க முடிகிறது. இயந்திர மனிதர்கள் மூலம் அறுவை மருத்துவமும் வேறு கடினமான வேலைகளையும் செய்து வருகிறோம். பூமியில் இருந்துகொண்டே வானத்தில் என்ன நடக்கின்றன என்பதை ஆராய்வதற்காக பல விண்கலங்களை வானத்தில் அனுப்பியுள்ளோம்.

தமிழரின் அறிவாற்றல்

தமிழன் அறிவியல் முன்னோடி அறிவியல் தோன்றுவதற்கு முன்னரே தமிழன் அறிவியல் பற்றிய சிந்தனைகளை சிந்தித்துள்ளனர். அவற்றை சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. பொறியியல் அறிவு, கட்டடவியல் அறிவு, மண்ணியல் அறிவு ,கனிமவியல் அறிவு, மருத்துவ அறிவு பல்வேறு வகையான அறிவியல் பிரிவுகளை அன்றைய தமிழ் மக்கள் அறிந்து செயல்படுத்தி இருந்தனர்

விண்வெளிப்பயணம்

நாசா ஆராய்ச்சி கூடத்தில் ஒரு ஒரு பிரிவின் துணைத் தலைவராக பொறுப்பேற்றார். 1995 இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சி குழுவில் சேர்ந்தார் 1997 ஆம் ஆண்டு கொலம்பியா விண்வெளி உறுதியான எஸ் டி எஸ் 87 முதல் விண்வெளிப் பயணத்தை தொடங்கினார். 16 நாட்கள் விண்வெளி ஆய்வு முடித்து விட்டு திரும்பிய போது அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது.

முடிவுரை

அறிவியலை உலகிற்கு தந்தவன் தமிழன் அத்தகைய தமிழனாய் பிறந்து, அறிவியல் துறையில் எண்ணற்ற சாதனைகளை செய்ய நாம் முயற்சி செய்ய வேண்டும்.

அல்லது

அரசு பொருட்காட்சி

முன்னுரை

எங்கள் ஊரின் அரசின் சார்பாக பொருட்காட்சி ஒன்று ஏற்பாடு செய்தார்கள் அதனை காண நானும் என்னுடைய குடும்பத்தாரும் சென்றோம்.. அதனை பற்றி உங்களிடம் கூறுகின்றேன்

நுழைவுச்சீட்டு

செக்ஸ்படம் காட்சி முகப்பு வாயிலில் நுழைவுச்சீட்டு விற்பனையகம் இருந்தது .பொருட்காட்சி சுற்றி பார்ப்பதற்காக மிக குறைந்த செலவில் நுழைவுச்சீட்டு அங்கு விற்பனை செய்து கொண்டிருந்தனர். வரிசையில் நின்று நுழைவுச்சீட்டு பெற்றோம்

கல்விச் செய்தி ...

**பல்லுறை கண்காட்சி அரங்குகள்**

**கல்வி, வேளாண்மை, தொழில்நுட்பம், மருத்துவம் ஆகியவை சார்ந்த எண்ணற்ற அரங்குகள் அங்கு இருந்தன. ஒவ்வொரு அரங்குகளும் தன் துறையில் உள்ள சிறந்த செயல்பாடுகளில் அங்கு காட்சிக்கு வைத்திருந்தனர். அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்த விழிப்புணர்வு காட்சிகளும் அங்கு அரங்கங்களில் வைக்கப்பட்டிருந்தன.**

**அங்காடிகள்**

**உணவு அங்காடி, காய்கனி அங்காடி புகைப்பட அங்காடி, விளையாட்டு பொருள்கள் அங்காடி ,வீட்டு உபயோகப் பொருட்கள் அங்காடி என பல அங்காடிகள் அங்கு காணப்பட்டன.**

**பிற பொழுதுபோக்கு அம்சங்கள்**

**குதிரையேற்றம் ,சிறிய தொடர் வண்டி , ராட்சச ராட்டினம், துப்பாக்கி சுடுதல் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் அங்கு நிறைந்து காணப்பட்டன. மாய வேடிக்கையும் பேய் வீடு அழகாக இருந்தது.**

**முடிவுரை**

**பொருட்காட்சி என்பது கண்ணுக்கும் அறிவுக்கு விருந்தளிக்கும் வகையில் இருந்தது.**